மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்குமாகாணம்
Provincial Department of Education – Northern Province

நிலையறி பரீட்சை 2021
தரம் 11

தரம் :- 11	வரலாறு I History I	நேரம் :- 1மணித்தியாலம்
சுட்டெண்:.....	33 T I	

கவனிக்க:

- **எல்லாவினாக்களுக்கும் விடை எழுதுக.**
- **1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1(, (2), (3), (4), என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**
- **உங்களுக்கு வழங்கப்பட்ட விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**

1) கோட்டை இராசதானி தொடக்கம் கண்டி இராசதானி வரையிலான காலப்பகுதியின் வரலாற்றை அறிந்து கொள்ள உதவும் இங்கிலிசு சட்டன எனும் நூல் ஒரு

1. தூதுகாவியம் ஆகும்
2. பரணிகாவியம் ஆகும்
3. புகழ் காவியம் ஆகும்
4. போர்க் காவியம் ஆகும்

2) ஈரவலயத்துக்குரிய வரலாற்றுக்கு முற்பட்ட கால மனிதன் வாழ்ந்த பாகியன்கல குகை அமைந்து காணப்படும் மாவட்டம் எது

1. மாத்தளை
2. அம்பாந்தோட்டை
3. களுத்தறை
4. இரத்தினபுரி

3) முன்வரலாற்றுக்காலத்தில் பச்சைக்களிமண் ஓடக்கல்லறை மயானங்கள் அகழ்வுகள் மூலம் கண்டறியப்பட்ட இடம் எது.

1. இப்பன்கட்டுவ
2. பெரகல
3. கல்சொஹன்
4. யட்டிகல்பொத்த

4) ஆரம்பகாலக்குடியேற்றங்கள் உலர்வலயத்திலே பரவியமைக்கான பிரதான காரணி எது?

1. மழைவீழ்ச்சியின் அளவு
2. வளமானமண்
3. உகந்தகாலநிலை
4. சனத்தொகைப் பெருக்கம்

5) ஆரம்பவரலாற்றுக் காலத்தில் பெரிய நகரக்குடியேற்றங்களைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட சொல் யாது?

1. நுருபுரம்
2. நகரம்
3. புரம்
4. கிராமம்

www.lkedu.lk

6) கி.மு 250 ஆம் ஆண்டை அண்மித்த காலப்பகுதிக் கல்வெட்டுக்களில் இல்லத்தலைவர்கள் கஹபதி என்று அழைக்கப்பட்டமையை உறுதிப்படுத்தும் ஆதாரம்.

1. அநுராதபுரம், பெரியபுளியங் குளம் கல்வெட்டு
2. தம்புள்ள, கொத்தல் கந்தை கல்வெட்டு
3. மாத்தளை, எம்புல் அம்பே கல்வெட்டு
4. தம்புள்ளை, களுதிய பொக்குனை விகாரைக் கல்வெட்டு

7) இலங்கையின் இரும்புப்பயன்பாடு தொடர்பான தெளிவான தொல்பொருள் சான்றுகள் கிடைக்கப் பெற்றது

1. வரலாற்றுக்காலத்திலாகும்
2. வரலாற்றுக்கு முற்பட்டகாலத்திலாகும்
3. முன்வரலாற்றுக்காலத்திலாகும்
4. ஆரம்ப வரலாற்றுக் காலத்திலாகும்

8) துட்டகைமுனு மன்னன் பருமகமாரது ஒத்துழைப்பைப் பெற்றுக் கொண்டதில் பெருதும் செல்வாக்குச் செலுத்திய காரணி.

1. அதிகாரம் மத்திய மயப்படுத்தப்பட்டமை
2. பிரதேசநிர்வாகத்தை ஒழுங்குபடுத்தியமை
3. அதிகாரம் பரவலாக்கப்பட்டமை
4. நாட்டின் பொருளாதார அபிவிருத்தி

9) நிரல் "அ" இல் தரப்பட்டுள்ள தரவுகளையும் நிரல் "ஆ" இல் தரப்பட்டுள்ள அரச எண்ணக்கருக்களையும் பொருத்தும் போது கிடைக்கும் சரியான விடைத் தொகுதி எது?

நிரல் "அ"	நிரல் "ஆ"
1. குட்டகண்ண அபய	Aமின்னேரியாத்தெய்வம்
2. நிஸங்கமல்லன்	Bகுபேரக்கடவுள்
3. மகாசேனன்	Cசக்கரவர்த்தி
4. முதலாம் காசியப்பன்	Dநரேஸ்வர

1. DBCA 2. DACB 3. DCBA 4. DCAB

10) பின்வருவனவற்றுள் நெற்பயிர்ச் செய்கையுடன் தொடர்புடைய சொல் எது?

1. கெத 2. நவதெளி 3. பிடபிம் 4.பெல

11) அநுராதபுரம் பண்டைய காலத்தில் ஒரு நகரமாக வளர்ச்சி பெறுவதற்கு பிரதானமான காரணம் யாது?

1. பௌத்தசமயம்
2. காலநிலை
3. வர்த்தக வளர்ச்சி
4. சனத்தொகைப் பெருக்கம்

12) வாய்க்கால்களில் மீன் பிடிப்பதற்காக அரசனுக்குச் செலுத்திய வரி எவ்வாறு அழைக்கப்பட்டது.

1. மதரமஞ்சக்க
2. போஜக்கபதி
3. தக்கபதி
4. கெதிஅட

www.lkedu.lk

13) இப்பன்கட்டுவ அகழ்வில் கண்டறியப்பட்ட அழகிய கழுத்துச் சங்கிலி செய்வதற்கு பயன்பட்ட மணிகள் எந்த நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டவை ஆகும்.

1. இந்தியா
2. அரேபியா
3. பாரசீகம்
4. சீனா

14) வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதன் தான் வாழ்ந்த இடத்தினை வாழ்வதற்கு ஏற்ற வகையில் மாற்றிக்கொள்ளும் திறமையைக் கொண்டிருந்தான் என்பதனை வெளிப்படுத்தும் ஆதாரம்

1. உடரஞ்சாமடம அகழ்வில் கண்டெடுக்கப்பட்ட வீட்டின் இடிபாடுகள்
2. கித்துள்கல பெலிலென அகழ்வில் பெறப்பட்ட கருங்கல் கட்டிட சிதைவுகள்
3. பதிராஜவெல பிரதேசத்தில் கிடைக்கப் பெற்ற சரளைக்கற்படிவுகள்
4. குருவிட்ட பட்டதொம்ப லெனக் குகையில் கண்டறியப்பட்ட எலும்புக்கூடு

15) அநுராதபுரத்தில் வாழ்ந்த பாரசீகவியாபாரிகள் பற்றிய தகவல்வழங்கிய கி.பி 5ஆம் நூற்றாண்டைச்சேர்ந்த தேசசஞ்சாரி

1. இபன்பதூதா
2. இபன்சஹ்ரியர்
3. சுலைமான்
4. கொஸ்மொஸ் இண்டிகொப் லேடஸ்

16) பின்வரும் கூற்றுக்களை வாசித்து அவற்றுள் **பிழையான** இரண்டு கூற்றுக்களைத் தெரிவு செய்க.

A. சிகிரியாக் குன்றைச்சுற்றி அமைக்கப்பட்ட நீர் அகழி பத்து கிலோமீற்றர் நீளமானது.

B. "வஜ்ரசும்பட்ட" எனும் இடிதாங்கி பண்டையகாலத்தில் ரூவன்வெலிசாய உச்சியில் பொருத்தப்பட்டு இருந்தது

C. ஜேதவனராமய அகழ்வின்போது கண்டறியப்பட்ட வர்ண ஓடுகள் இந்த நாட்டின் மண்பாண்டக்கைத்தொழிலுக்கான சிறந்த உதாரணமாகும்

D. சமனலவெவ பிரதேசத்தில் கண்டறியப்பட்ட இரும்பு பெற்றுக் கொள்வதற்கான அடுப்பினை எரிப்பதற்காக "மரங்" எனப்படும் மரத்தின் கரி பயன்படுத்தப்பட்டது

1. B யும்D யும்
2. B யும்C யும்
3 A யும்B யும்
4. A யும்C யும்

17) பின்வரும் மன்னர்களுள் பிரதான வீதிகளின் கவ்வையில் இருந்து கவ்வைக்கு கற்றூண்களை நடுமாறு ஆணையிட்டவர்யார்?

1. பண்டுகாபயன்
2. 1ஆம் விஜயபாகு
3. நிஸங்கமல்ல
4. 1ஆம் பராக்கிரமபாகு

18) ஆறாம் பராக்கிரமபாகுவின்தாயாரின் நினைவாக அமைக்கப்பட்ட பிரிவெனா எது?

1. காரகல பத்மாதேவி பிரிவெனா
2. தெவிநுவர இருகல் குலதிலக பிரிவெனா
3. வீதாகமகணாநந்தா பிரிவெனா
4. பெப்பிலியானே சுனேத்திராதேவி பிரிவெனா

www.ikedu.lk

19) கண்டி இராச்சியத்தின் அரச மாளிகையின் தேவைக்காகப்பயன்பட்ட நிலம் எவ்வாறு அழைக்கப்பட்டது.

1. நிந்தகம்
2. விகாரம்
3. கபடாகம்
4. பரவேனிகம்

20) பின்வருவனவற்றுள் எந்த நூல் கம்பளைக் காலத்தில் எழுதப்பட்டதாகும்.

1. கவிசிலுமின
2. மயூரசந்தேசய
3. குத்திலகாவியம்
4. ரசவாஹினி

❖ 21, 22ஆம் வினாக்களுக்கு A தொடக்கம் D வரையான தகவல்களை அடிப்படையாகக்கொண்டு விடையளிக்குக.

A. வெலிவிட்ட சரணங்கர பிக்குவிற்கு சங்கராஜா" பதவியை வழங்கியமை.

B. றோமன் கத்தோலிக்க சமயத்தைக்கைவிட்டு பௌத்த சமயத்தைத்தழுவியமை.

C. கி.பி. 1638 இல் இடம்பெற்ற கன்னொருவ யுத்தத்தில் போர்த்துக்கேயரை படுதோல்வி அடையச் செய்தமை

D. கி.பி. 1580 இல் கண்டியைக்கைப்பற்றி சீதாவாக்கையில் இருந்து கண்டி இராச்சியத்தையும் ஆட்சி செய்தமை.

21) மேற்கூறிய வரலாற்று நிகழ்வுகளில் முதலாம் விமலதர்மசூரியனுடன் தொடர்புடையது

1. A
2.B
3. C
4.D

.

22) மேற்கூறிய வரலாற்று நிகழ்வுகளில் இரண்டாம் இராஜசிங்கனுடன் தொடர்புடையது.

1. A
2.B
3. C
4.D

23) ஐரோப்பாவில் மத்தியகாலத்தில் இறுதிப்பகுதியில் நன்கு முன்னேற்றம் அடைந்திருந்த வர்த்தக நகரம் எது?

1. ரோம்
2.வெனிஸ்
3. கொன்ஸ்தாந்திநோபிள்
4.ஜெனோவா

24) நிரல் Iஇல் இலங்கையின் இரண்டாவது நகரமயமாக்கல்கால கட்டத்துக்குரிய நகரங்களும், நிரல் II இல் அந்த காலங்களுடன் தொடர்புடைய சில வரலாற்றுச்சம்பவங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. நிரல் Iஇன் ஒழுங்கு முறைக்கேற்பநிரல் II இனைப் பொருத்தும் போது கிடைக்கும் சரியான விடைத் தொகுதியைத் தெரிவு செய்க

நிரல் I		நிரல் II
1	தம்பதெனியா	A சீனாவின் செங்கோ எனும் தளபதியின் ஆக்கிரமிப்பு
2	யாப்பகுவ	B சிங்கள போதிவம்சம் என்னும் நூல் எழுதப்பட்டமை
3	குருநாகல்	C விஜயசுந்தரராமய விகாரை கட்டப்பட்டமை
4	கம்பளை	D வர்த்தக தூதுக்குழு ஒன்று எகிப்து நாட்டுக்கு அனுப்பப்பட்டமை

1. CDAB
2.CDBA
3. BCDA
4.BCAD

www.lkedu.lk

25) பிரித்தானியாவில் நிலக்கரி அதிகமாகக்காணப்படும் பிரதேசங்களில் **உள்ளடங்காதது** எது?

1. தென்வேல்ஸ் 2.லங்காசயர் 3.யோக்சயர் 4.பேர்மிங்காம்

26) ஜோன் மெக்கடம் என்பவரால் கி.பி.1811ஆம் ஆண்டில் கண்டறியப்பட்டு விருத்தி செய்யப்பட்ட துறை எது?

1. பெருந்தெருக்கள் 2.தொலைபேசி 3. ஆகாயவிமானம் 4.புகையிரதம்

❖ கீழே தரப்பட்ட A, B என்ற கூற்றுக்களை அடிப்படையாகக்கொண்டு 27ஆம், 28ஆம் வினாக்களுக்கு விடை தருக.

கூற்று A :-கிராமசபைகளிடம் இருந்த நீதித்துறை அதிகாரம் இல்லாமல் செய்யப்பட்டது.

கூற்று B :-சுதந்திரத்தை இழந்தமையும், அரசர் இல்லாமை பற்றிய மன வேதனையும்

27) கி.பி.1818 ஆம் ஆண்டின் முதலாவது சுதந்திரப்போராட்டம் தொடர்பாக

1. Aயும் B யும் உண்மை 2. Aயும் B யும் பொய்யானது
3. Aஉண்மை B பொய் 4. B உண்மை Aபொய்

28) கி.பி.1848 ஆம் ஆண்டின் இரண்டாவது சுதந்திரப்போராட்டம் தொடர்பாக

1. A யும் B யும் உண்மை 2. A யும் B யும் பொய்யானது
3. A உண்மை B பொய் 4. B உண்மை A பொய்

29) கைத்தொழில் புரட்சியின் விளைவுகளில் அரசியல் துறையில் ஏற்படுத்தப்பட்ட மாற்றம்.

1. கைத்தொழில் உற்பத்திகள் அதிகரித்தமை
2.அதிக நகரங்கள் தோற்றம் பெற்றமை
3. முதலாளி, தொழிலாளி வர்க்க முரண்பாடுகள் தோற்றம் பெற்றமை
4. சூழல் மாசடைதல் அதிகரித்தமை

30) பிரித்தானியர் ஆட்சிக்காலத்தில் துப்பாக்கிவரி, முத்திரைவரி, ஆள்வரி, போன்ற வரிகளை விதித்த ஆளுநர் யார்?

1. வில்லியம் கிரகெரி 2. டொரிங்டன்
3. தோமஸ் மெயிட்லண்ட் 4. பிரட்றிக் நோத்

31) இலங்கையில் ஒல்லாந்தர் ஆட்சியினால் கிடைத்த பிரதானமான விளைவு எது?

1. றோமன் கத்தோலிக்க சமயம் பரவியமை
2. பொருட்களைக் கொண்டு செல்வதற்கு கால்வாய்களைப் பயன்படுத்தியமை
3. கோப்பிப் பயிர்ச் செய்கையை தோட்டப்பயிராக ஒழுங்கு படுத்தியமை
4. பைலா-கபிரிஞ்ஞா இசைக்கலையில் பிரபல்யம் அடைந்தமை

www.lkedu.lk

32) இலங்கையர்கள் ஆராய்ந்தறியாமல் மேற்கத்தேய நாகரிகத்தை தழுவிக் கொள்கின்றமையை "சிங்ஹள ஜாதிய"பத்திரிகையின் மூலம் விமர்சித்த பௌத்த சிந்தனையாளர்.

1. வலிசிங்க ஹரிச்சந்திர 2. அநகாரிகதர்மபாலா

3. பியதாச சிறிசேன 4. ஜோன் த சில்வா

❖ கீழே A,B,C,D,ஆகியவற்றில் தரப்பட்டுள்ள சோடிக் கூற்றுக்கள் / சோடிச் சொற்களை அவதானித்து 33 தொடக்கம் 36 வரையான வினாக்களுக்கு விடை தருக.

A. –1. குடியேற்ற வாதக் கொள்கை

2. முதலாம் உலக மகாயுத்தம்

B. -1. தோமஸ் மெயிற்லண்ட்

2. கி.பி.1797ஆம் ஆண்டின் .

கரையோரக்கிளர்ச்சி

C. -1. புதியவர்த்தகப்பாதைகள்கண்டுபிடிக்கப்பட்டமை

2. கொன்ஸ்தாந்திநோபிள் துருக்கியர் வசமாதல்

D. -1. ஆளுநர் எட்வட் பாண்ஸ்

2. கோப்பிச் செய்கை

33) இரண்டாவது முதலாவதன் வளர்ச்சிக்கு காரணமாக அமைந்தமையை காட்டும் சோடிச் சொற்கள் /சோடிக் கூற்றுக்களைக் கொண்ட விடை எது?

1. A 2.B 3. C 4.D

34) முதலாவதற்கும், இரண்டாவதற்கும் இடையே **தொடர்பின்மையைக்காட்டும்** சோடிச் சொற்கள் /சோடிக் கூற்றுக்களைக் கொண்ட விடை எது?

1. A 2.B 3. C 4.D

35) முதலாவதன் செயற்பாடு இரண்டாவதுதோன்றுவதற்கு அடிப்படையாக அமைந்ததைக்காட்டும் சோடிச் சொற்கள் /சோடிக் கூற்றுக்களைக் கொண்ட விடை எது?

1. A 2.B 3. C 4.D

36) முதலாவதன் அனுசரனை காரணமாக இரண்டாவது விருத்தியடைந்தமையை காட்டும் சோடிச் சொற்கள் /சோடிக் கூற்றுக்களைக் கொண்ட விடை எது?

1. A 2.B 3. C 4.D

37) தோட்டத்தொழிலாளர்களின் மத்தியில் தொழிற் சங்கங்களை அமைப்பதில் முன்னோடியாகச் செயற்பட்ட தலைவர்

1. N.M.பெரேரா 2. A.E.குணசிங்க 3.S,A. .விக்கிரமசிங்க 4. கோ.நடேசஐயர்

www.ikedu.lk

❖ பின்வரும் A தொடக்கம் E வரையான தகவல்களை அடிப்படையாகக்கொண்டு 38ஆம்,39ஆம் வினாக்களுக்கு விடை தருக

A. – ஆளுநர் நாயகத்தால் பிரதம நீதிபதி நியமிக்கப்பட்டமை

B. - அரசியல் யாப்பு நீதிமன்றம் உருவாக்கப்பட்டமை

C. – நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவி அறிமுகம் செய்யப்பட்டமை

D. – தேசிய அரசுப்பேரவை உருவாக்கப்பட்டமை

E. – பொதுசனஅபிப்பிராய தேர்தல் முறை அறிமுகமானமை

38) 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின் அம்சங்களை உள்ளடக்கமாகக் கொண்டிருக்கும் விடை

1. A யும்B யும் 2. C யும்E யும் 3. B யும்D யும் 4. D யும்E யும்

39) 1972ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின் அம்சங்களை உள்ளடக்கமாகக் கொண்டிருக்கும் விடை

1. A யும்B யும் 2. C யும்E யும் 3. B யும்D யும் 4. D யும்E யும்

40) இலங்கையில் பிரித்தானியர் ஆட்சியினால் ஏற்பட்டட கலாசாரமாற்றம் எது?

1. தொழிற்சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டமை
2. மேலைத்தேய கல்விமுறை பரவியமை
3. சும்பளத்துக்கு வேலை செய்யும் தொழிலாளர் வர்க்கம் தோற்றம் பெற்றமை
4. தொழிலாளர் வகுப்பு தோற்றம் பெற்றமை

(40X2=80 புள்ளிகள்)

www.lkedu.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்குமாகாணம்
Provincial Department of Education – Northern Province

நிலையறி பரீட்சை 2021
தரம் 11

தரம் :- 11	**வரலாறு II** **History II**	**நேரம் :-** **3மணித்தியாலம்**
சுட்டெண்:.....	**33 T II**	**மேலதிக வாசிப்பு நேரம் :-** **10 நிமிடம**

வினாப்பத்திரத்தை வாசித்து வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

- பகுதி I இன் வினா இலக்கம் **ஒன்று** கட்டாயமானது
- பகுதி II இல் இருந்து **நான்கு** வினாக்களுக்கும் பகுதி III இல் இருந்து **ஒரு** வினாவுக்கும் விடை எழுதுக.
- எல்லாமாக **ஆறு** வினாக்களுக்கு விடை எழுதுக.

பகுதி I

1) (அ)

i.கீழே தரப்பட்டுள்ள வரலாற்று இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள இலங்கைப் புறவுருவப் படத்தில் குறித்துப் பெயரிடுக.

மாணிக்ககங்கை, கன்னொருவ, கந்தரோடை, கசாதொட்ட, சீகிரியா, யாப்பகுவ,பதிராஜவெல,மின்னேரியாவாவி, களுகங்கை, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரக்கோட்டை, பொம்பரிப்பு, உடரஞ்சாமடம.

(12 புள்ளிகள்)

ii.கீழே தரப்பட்டுள்ள வரலாற்று இடங்கள் அனைத்தையும் வழங்கப்பட்டுள்ள உலகப் புறவுருவப் படப்பகுதியில் குறித்துப் பெயரிடுக.

மும்பாய்,பிரான்ஸ், மலாக்காநீரிணை, வத்திக்கான், பத்தேவியா, பாரசீகவளைகுடா, (6புள்ளிகள்)

(ஆ)

i.கீழே A,B,C,D எனத்தரப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளை ஒழுங்கு முறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

A. கி.பி 1764 இல் கண்டி இராச்சியத்தினை ஆக்கிரமித்த ஒல்லாந்த ஆளுநர்.

B. இந்தியாவுக்கு வருகை தந்து மொகலாயப்பேரரசின் மாமன்னன் ஜஹாங்கீருடன் பேச்சுவார்த்தை நடத்திய கப்பல் குழுவின் தலைவர்

C. மிருகங்களை எவரும் கொல்லக்கூடாது என முதன்முதல் சட்டம் இயற்றிய மன்னன்

D. வசப மன்னன் காலத்தில் ரிஷிகிரி அமைச்சரினால் நாகதீப ஆட்சி செய்யப்பட்டதனை குறிப்பிடும் மூலாதாரம். (4புள்ளிகள்)

www.kedu.lk



A



B

❖ A,B ஆகிய படங்களை அவதானித்து கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை வினா இலக்க ஒழுங்கு முறைப்படி உங்கள் விடைத்தாளில் எழுதுக.

ii.1. படம் A இல் காட்டப்பட்டிருக்கும் நிர்மாணிப்பின் பெயர் என்ன?

2. இதனைநிர்மாணித்த மன்னன் யார்?

3. இது அமைந்து காணப்படும் இராசதானி எது?

4. இதில் செல்வாக்குச் செலுத்திய கலைமரபு யாது? (4புள்ளிகள்)

iii. 1. படம் B இல் காட்டப்பட்டிருப்பவரின் பெயர் என்ன?

2. இவர் வசித்து வந்த விகாரை எது?

3. இவர் தலைமை தாங்கிய பிரசித்தமான விவாதம் நடைபெற்ற இடம் எது?

4. இவ்விவாத விபரங்கள் அடங்கியநூல் ஒன்றை வாசித்ததன்மூலம் பௌத்தம் பற்றிய தெளிவைப் பெற்று இலங்கைக்கு வந்த நபர் யார்? (4புள்ளிகள்)

பகுதி II(B)

2)

i. இலங்கை பற்றிய தகவல்களைத்தரும் தென்னிந்திய இலக்கிய மூலாதாரங்கள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்)

ii. இலங்கைக்கு வருகை தந்து நேரடி அனுபவங்களைப் பெற்று இலங்கை பற்றி எழுதியுள்ள ஐரோப்பிய நாட்டவர்கள் **இருவரின்** பெயர்களைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

iii. இராசரட்டைக்கால வரலாற்றை அறிய உதவும் பௌத்த சமய நூல்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2புள்ளிகள்)

iv. புராதன சிதைவுகள் மூலம் அறிந்து கொள்ளக் கூடிய **இரண்டு** விடயங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

v. வரலாற்றைக் கட்டி எழுப்புவதில் கல்வெட்டுக்கள் கொண்டிருக்கும் முக்கியத்துவத்தினை **மூன்று** காரணிகளின் துணையுடன் விளக்குக. (6 புள்ளிகள்)

3)

i. இலங்கையில் இரணைமடுப்படிவுகள் நிலத்தினுள் புதைந்துள்ளதாக கருதப்படும் சிறு வெப்பமான காலப்பகுதி எது? (1புள்ளி)

ii. வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதன் பற்றிய தகவல் கிடைத்துள்ள தாழ்நில உலர்வலய குகை வசிப்பிடங்கள் **இரண்டினைக்**குறிப்பிடுக. (2புள்ளிகள்)

iii. (A)வரலாற்றுக்கு முற்பட்டகாலமனிதர்களின் உடலமைப்பின் சிறப்பு அம்சங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

(B)வரலாற்றுக்கு முற்பட்டகால மனிதர்களின் எலும்புக் கூடுகள் கண்டறியப்பட்ட வசிப்பிடங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

www.ikedu.lk

iv. ஆரம்பவரலாற்றுக்காலத்தில் கிராமங்களை நிர்வகித்த "கமிக" வின் பணிகளை **இரண்டு** காரணிகளின் ஊடாக விளக்குக. (5 புள்ளிகள்)

v. வரலாற்றுக்காலத்தில் நடைமுறையில் இருந்த பொருளாதார அமைப்பில் கைத்தொழில் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த விதத்தினை **மூன்று** காரணிகளின் அடிப்படையில் விளக்குக. (6 புள்ளிகள்)

4)

i. பின்வரும் ஆற்றுப்பள்ளத்தாக்குகளை அண்மித்து அமைந்திருந்த நிர்வாக மையங்களை ஒழுங்கு முறையில் எழுதுக. (3 புள்ளிகள்)

A- கிருந்தி ஓயா,B- மகாவலி கங்கை ,C- மல்வத்து ஓயா,

ii. பின்வரும் A தொடக்கம் D வரையான கூற்றுக்களுக்குப் பொருத்தமான விடைகளை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறைப்படி எழுதுக.

A. மானாகட்டிய என்ற பெயரினை உடைய குளத்தினைக்கட்டிய மன்னன்

B. குளக்கட்டுநீரினால் அரிக்கப்படுவதை தடுப்பதற்காக அணைக்கட்டின் உட்புறத்தில் கற்கள் பதித்து உருவாக்கிய அமைப்பு

C. தாதுசேன மன்னனால் அமைக்கப்பட்ட புகழ்மிக்க நீர்ப்பாசனக்கால்வாய்.

D. குட்டகண்ண திஸ்ஸ மன்னனால் அமைக்கப்பட்டதாக கருதப்படும் பூங்கா

(மகாசேனன், வசபன், கலிங்கல் அலைதாங்கி, அங்கமடில்ல, ஜயகங்கை , மகாமேகவனம், பத்மஸ்வர) (4 புள்ளிகள்)

iii. இலங்கையில் பண்டையகாலத்தில் வைத்திய முறையும், சுகாதாரசேவையும், சிறப்பான நிலையில் இருந்துள்ளது என்பதனை அலாஹனபிரிவெனா அகழ்வினை ஆதாரமாகக் கொண்டு **இரு**காரணிகளின் அடிப்படையில் விளக்குக.

iv. பொலநறுவை இராசதானி வீழ்ச்சியடைந்தமைக்கான காரணங்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக.

5)

i. கண்டி இராச்சியத்தினை ஆட்சி செய்த நாயக்கர் வம்ச ஆட்சியாளர்கள் **மூவரைக்**குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

ii. கண்டி இராச்சிய காலப்பகுதியில் பின்வரும் A,B,C,D என்ற செயற்பாடுகளுடன் தொடர்புடையவர்களை அடைப்புக் குறிக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறைப்படி எழுதுக.(4 புள்ளிகள்)

A. பிரதானிகளின் கட்டளைகள்,செய்திகளை பிராந்திய நிர்வாக அதிகாரிகளுக்கு கொண்டு சென்றவர்.

B. இரண்டாவது பிரதமபிரதானி அழைக்கப்பட்ட பெயர்

C. தலதாமாளிகையின் புனிததந்ததாதுவுக்கு பொறுப்பான அதிகாரி

D. அரச மாளிகைக்கு உணவு, குடிபானங்களை வழங்கியவர்

(பத்வடநிலமே, லியனரால, பல்லேகம்மா, கஜநாயக்கநிலமே, தியவடநிலமே, கடுபுள்ளே உடகம்பா, சலுவடநிலமே,)

iii. கண்டி இராச்சிய சமூக அமைப்பில் காணப்பட்ட சிறப்பம்சங்கள் **இரண்டினைக்** குறிப்பிட்டு விளக்குக.(5 புள்ளிகள்)

iv. கண்டி இராச்சியகாலத்தில் பின்வரும் இரு செயற்பாடுகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த முறைகளை விளக்குக.

(A) பிரதேசநிர்வாகம் (B) நீதிமன்றச்செயற்பாடுகள்

(6 புள்ளிகள்)

www.ikeau.lk

6)

i. இந்து சமுத்திரத்தினைச் சேர்ந்த நாடுகளுடன் வர்த்தகப்போட்டியில் ஈடுபட்ட **மூன்று** ஐரோப்பிய நாடுகளைப் பெயரிடுக.(3 புள்ளிகள்)

ii. ராஜதிராஜசிங்கன் கண்டியை ஆட்சிசெய்யும் போது கண்டிக்கு வருகை தந்த ஆங்கிலேயநாட்டுத்தூதுவர்கள் **இருவரைக்** குறிப்பிடுக.(2 புள்ளிகள்)

iii. மியூறன் குழுவின் பரிந்துரைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக.(2 புள்ளிகள்)

iv. போர்த்துக்கேயராலும், ஒல்லாந்தராலும் கைப்பற்ற முடியாமல்போன கண்டி இராச்சியத்தினை ஆங்கிலேயர் எளிதாகக்கைப்பற்றியமைக்கான **இரு** காரணங்களைக் குறிப்பிட்டு விளக்குக. (5 புள்ளிகள்)

v. (A) கி.பி 1848ஆம் ஆண்டின் சுதந்திரப்போராட்டத்துக்கு தலைமைதாங்கிய **இரு** தலைவர்களைக்குறிப்பிடுக.

(2 புள்ளிகள்)

(B) கி.பி.1848ஆம் ஆண்டின் சுதந்திரப் போராட்டத்தினால் ஏற்பட்ட விளைவுகள் **இரண்டினைக்** குறிப்பிட்டு விளக்குக.(4 புள்ளிகள்)

7)

i. பின்வரும் வரலாற்று நிகழ்வுகளுடன் தொடர்புடைய அரசியல் யாப்புக்களை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து **A,B,C** ஒழுங்கில் எழுதுக. (3புள்ளிகள்)

A. சர்வஜனவாக்குரிமை இலங்கைக்கு வழங்கப்பட்டமை.

B. சட்டவாக்கக்கழகம், சட்டநிர்வாகக்கழகம் அமைக்கப்பட்டமை.

C. பிரதேசவாரிப்பிரதிநிதித்துவமுறை அறிமுகம் செய்யப்பட்டமை
(கோல்புறுக், டொனமூர், மனிங், குறூமக்கலம், சோல்பரி)

ii. (A) சோல்பரி அரசியல் யாப்பு இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் ஏற்பட்டமாற்றங்கள் **இரண்டினைக்** குறிப்பிடுக.(2 புள்ளிகள்)

(B) சுதந்திரம் கோரிமேற்கொண்ட போராட்டங்களுக்கு பிரசார முறையாக சூரியமல் இயக்கத்தினப் பயன்படுத்திய இடதுசாரித் தலைவர்கள் **இருவரைப்** பெயரிடுக. (2புள்ளிகள்)

iii. பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் மலையகப்பிரதேசங்களில் கோப்பிச் செய்கையின் விருத்தியில் செல்வாக்குச் செலுத்திய **இரண்டு** காரணிகளைக் குறிப்பிட்டு விளக்குக.(5புள்ளிகள்)

iv. பிரித்தானியர் ஆட்சிகாரணமாக இந்நாட்டில் ஏற்பட்டசமூகமாற்றங்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு விளக்குக.(6 புள்ளிகள்)

8)

i. மறுமலர்ச்சி என்பதில் இருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது? (1 புள்ளி)

ii. ஐரோப்பாவில் கல்வி மறுமலர்ச்சியினால் மாற்றத்துக்கு உள்ளான **இரு** துறைகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

iii. கீழே A,B,C,D என்பனவற்றில் தரப்பட்டுள்ள வினாக்களுக்கான விடைகளை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறைப்படி எழுதுக.(4 புள்ளிகள்)

A. புவியீர்ப்பு சக்தியைக் கண்டு பிடித்தவர்.

B. மனித உடலில் குருதிச்சுற்றோட்டம் தொடர்பில் முக்கியமான தகவலை வெளியிட்டவர்.

C. மேற்கு இந்தியத் தீவுகளைக் கண்டுபிடித்த நாடுகாண் பயணி

D. பிலிப்பைன்ஸ் நாட்டைக் கண்டுபிடித்த நாடுகாண் பயணி
(கலிலியோ கலிலி, ஐசாக் நியூட்டன், கபொட் சகோதரர்கள், பெர்டினன் மகலன், பெரசல்ஸ், வில்லியம் ஹார்வே)

iv. மறுமலர்ச்சிக்காலத்தில் அரசியல் துறையில் ஏற்பட்ட **இரு** மாற்றங்களைக் குறிப்பிட்டு விளக்குக.(5 புள்ளிகள்)

v. மறுமலர்ச்சி இலங்கையின்மீது ஏற்படுத்திய தாக்கத்தினால் பின்வரும் துறைகளில் ஏற்பட்ட மாற்றங்களை சுருக்கமாக விளக்குக.

(A)- அரசியல், (B)- பொருளாதாரம(6 புள்ளிகள்)

www.kalvi.lk

9)

i. கைத்தொழிற்புரட்சி ஐரோப்பாவில் ஏற்பட்டமைக்கான பிரதான காரணம் யாது?(1 புள்ளி)

ii. 18ஆம் நூற்றாண்டில் குடியேற்ற நாடுகளை கைப்பற்றி பரவலானமுறையில் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஈடுபட்ட **இரண்டு** நாடுகளைக் குறிப்பிடுக.(2 புள்ளிகள்)

iii. கைத்தொழிற் புரட்சிக்காலத்தில் பின்வருபவர்களுடன் தொடர்புடைய கைத்தொழில் உற்பத்திகளை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்து ஒழுங்கு முறையில் எழுதுக. (4 புள்ளிகள்)

A. ஜோன்கே
B. ஹென்றிகோட்
C. வில்லியம் சீமன்ஸ்
D. ரொபட் புல்டன்

(புகைப்படகு, ஜெனி நூல் நூற்கும் இயந்திரம், பறக்கும் நூனாளி, இரும்புக்கேபிள் கம்பிகள், மின் அடுப்பு, ரோலர் இயந்திரம்.) (4 புள்ளிகள்)

iv. கைத்தொழிற் புரட்சிக்காலத்தில் இங்கிலாந்தில் நிலக்கரிக்கைத்தொழில் முன்னேற்றம் கண்டதில் செல்வாக்குச் செலுத்திய **இரண்டு** காரணிகளை உதாரணத்துடன் விளக்குக. (5 புள்ளிகள்)

v. கைத்தொழிற்புரட்சியின் விளைவுகளினால் சமூகத்துறையில் ஏற்பட்ட மாற்றங்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு அவற்றினை விளக்குக. (6 புள்ளிகள்)


www.lkedu.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்குமாகாணம்
Provincial Department of Education – Northern Province

நிலையறி பரீட்சை 2021
தரம் 11

தரம் :- 11	வரலாறு II History II	சுட்டெண்:.....:

1.(அ) (i)




www.ikedu.lk

மாகாணக் கல்வித் திணைக்களம்
வடக்குமாகாணம்
Provincial Department of Education – Northern Province

நிலையறி பரீட்சை 2021
தரம் 11

தரம் :- 11	வரலாறு II HistoryII	சுட்டெண்:.....:

1.(அ) (ii)



www.lkedu.lk